1987 ஏப்ரல் 20]

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் சுற்றுலா பயணியர் தங்கும் விடுதி.

419—(*வினா எண் 13481) திரு. கு. அ. செங்கோட்டையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் சுற்றுலா பயணியர் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1987-88 ஆம் ஆண்டுக்கான உரிமைக் குழுவுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் 14 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்டு